# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## விசாரணை நாள் 10.07.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 12923-E-2024**

திரு கோ.செல்வராஜ் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு கோ.செல்வராஜ் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நில நிர்வாகத் துறையின் உதவி ஆணையர் திரு கு.ச.ராம்குமார் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 18.06.2024 |
| **கோரிய தகவல்**:- சர்வே எண்.78/2 தொடர்பான நில ஆவணத்தில் திருத்தம் செய்யுமாறு கோரி, சென்னை., சேப்பாக்கம், வருவாய் நிர்வாக ஆணையருக்கு 23.04.2024 அன்று அனுப்பப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை வழங்குமாறு கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 30.08.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 01.10.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை சேப்பாக்கம், நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பிய மனுவிற்கு உரிய பதில் அனுப்பப்படவில்லை என தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும், பின்னர், 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு **18.07.2024 மற்றும் 05.09.2024 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக** தெரிவித்து, அவற்றின் நகல்களையும், அவற்றை மனுதாரர் பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டைகளின் நகல்களையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

> **மனுதாரர் 18.06.2024 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக அவருக்கு 18.07.2024 மற்றும் 05.09.2024 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மனுதாரரும் அவற்றை பெற்றுக் கொண்டுள்ளார். மேலும், இதே வழக்கு (SA 12923/E/2023) தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் அளித்திருந்த பதில் குறித்து மனுதாரர் கருத்து ஏதும் தெரிவிக்காத காரணத்தால், இவ்வழக்கை ஆணையம் 03.03.2026 அன்று முற்றாக்கம் செய்துள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் வழக்கு எண் SA 12923-E-2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர் V
நில நிர்வாகத் துறை,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு கோ.செல்வராஜ்,
எண்.1/129, காமாட்சி அம்மன் கோவில் தெரு,
த.கொசப்பாளையம்,
விக்கிரவாண்டி வட்டம்
அன்னியூர் - 605 202
விழுப்புரம் மாவட்டம்

Copy to file
CR/PA